DepositionofWitness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No.89/ 2019

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.3**

| | | | |
|---|---|---|---|
| Name : | தயாளன் | Calling: | சிறப்பு உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| Father's Name: | சங்கரன் | Religion: | இந்து |
| Village: | · | Age: | 59 |
| Taluk: | திருப்பத்தூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 18.02.2021

| SIGN : |
|---|

CC.86/2020 அ.சா.3 தயாளன் த/பெ. சங்கரன் வயது 59 நேரம். 12.25 P.M..

முதன்மை விசாரணை.

நான்காவல் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து ஓய்வு பெற்று திருப்பத்தூரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கத் தெரியும். 16.01.2016ம்தேதி அம்பலூர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது மாலை 4 மணிக்கு ராமநாயக்கன்பேட்டை ஊராட்சி மன்ற அலுலவலகத்தில் காணும்பொங்கல் பணியில் நானும் என்னுடன் உதவி ஆய்வாளர் சீனிவாசன், சிறப்பு உதவி ஆய்வாளர் கோதண்டன், த.கா. 1926 குமார் அவர்களும் கிராம நிர்வாக அலுவலர் சத்தியா ஆகியோர்கள் அங்கு பாதுகாப்பு பணியில்இருந்தபோது அதே கிராமத்தைசேர்ந்த கோவிந்தசாமி மகன் சரவணன் என்பவர் டேய் தேவிடியா பசங்களே என்று அசிங்கமாகவும், அருவெருப்பு ஏற்படும் படி பேசினார் பொதுவாக பேசிக்கொண்டிருந்தார். போலிசார் ஆகிய நாங்கள் போய் அவரை கேட்டபோது எங்கள் பேச்சை கேட்டகாமல் மீண்டும் அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார். அவரிடம் யாராவது வந்தால் தொலைத்து விடுவேன் என்று எங்களை பார்த்து மிரட்டினார். இது சம்மந்தமாக அம்பலூர் கிராம அலுவலர் காவல் நிலையத்தில புகார் கொடுத்தார். புகார் மீது உதவி ஆய்வாளர் திரு. சீனிவாசன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார் அதற்க நான் உதவியாக இருந்தேன் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.

ராமநாயக்கன்பேட்டையில் சம்பவ தினத்தன்று நான் சொன்ன இடத்தில 5 போக்ள் கொண்ட குழு இருந்தார்களா என்றால காவல்நிலையத்தார்களும் இருந்தார்கள். தற்போது

நீதிமன்றத்தில் முதன்மை விசாரணையில் நான் சாட்சியம் அளித்த வித்ததில் தான் உதவி ஆய்வாளரிடமும் விசாரணையில தெரிவித்துள்ளேன் என்றால சரிதான். அதற்கு மாறாக போலிஸ் விசாரணையில் வாக்குமூலம் பதிவுசெய்து இருந்ததால் அது தவறு. காணும்பொங்கள் அன்று ராமநாய்க்கன்பேட்டைக்கு எதற்காக சென்றோம் என்றால் மாடு விடுவது சம்மந்தமாக சென்றோம். மாடு விடுவது சம்மந்தமாகஅறிவிப்பு எதாவது கொடுத்தார்களா என்றால் கொடுக்கவிலலை. அம்பலூர் காவல்நிலைய எல்லைக்கு ட்படப்ட மற்ற கிராமங்களில மாடு விடும் பணிக்கு சென்று இருந்தீர்களா என்றால் செல்லவில்லை. எருது விடும் திருவிழா குறித்து புகைப்படம் வால்போஸ்ட் அறிவிப்பு ஆகியவற்றை உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்தோமா என்றால ஒப்படைக்கவில்லை. அவ்வாறு நாங்கள் ஒப்படைத்து இருந்தால் தான் அந்த தேதியில் மாடு விடும் திருவிழா நடைபெறும் என தெரியவரும் என்றால் சரிதான். ராமநாயக்கன்பேட்டையில காணும் பொங்கல் அன்று அனைத்து ஊர்மக்கள் ஒன்று கூடி மாமன் மச்சான் என்ற உறவு முறையில் வெற்றிலை பாக்கு மாற்றி கொள்ளும் நடைமுறை உள்ளது என்பத தெரியுமா என்றால தெரியாது. காணும் பொங்கல் அன்று சம்பவயிடத்திற்கு தகவல் தெரிந்து சென்றேனா என்றால் தகவல் தெரிந்து செல்ல வில்லை அங்கு பாதுக்காப்பு பணிக்கு சென்றோம். அந்த தேதியில் கிராம மக்கள் சுமார் 1000 நபர்கள் அங்கு இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். வெத்திலை பறிமாற்றம் நடைபெறும்போது அந்த ஊரில் மேளதாளத்தோடு திருவிழா நடைபெறும் என்றால் அது பற்றி தெரியாது. மேளதாள சத்தம்கேட்டு தான் நான் சம்பவயிடம் சென்றோம் என்றால் சரியல்ல அதற்கு முன்பாகவே நாங்கள் அங்கு சென்று விட்டேன். ஊர் திருவிழாவில் மேளம் அடித்ததை தவறாக புரிந்து கொண்டு எருதுவிடும் திருவிழா என்று பொதுமக்களை தடுத்து நிறுத்தினோம் என்றால் சரியல்ல. கோதண்டன், குமார் ஆகியோர் பொதுமக்கள் மேளதாளம் அடிக்கும் போது நிறுத்தச் சொல்லி நிறுத்ததினால் அதில அசிங்கம் ஏற்பட்டதற்காக அங்கிருந்த நபர் மீது வழக்கு போடுவோம் என்று எதிரி மீது ஒரு பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அசா1 சத்தியாவிடம் சம்பவயிடத்தில புகார் வாங்கினேனா என்றால் அவர் காவல்நிலையம் வந்து புகார் கொடுத்தார். அசா1 சத்தியா புகார்கொடுக்கும்போது காவல்நிலையத்தில் நான் இருந்தேனா என்றால நான் இல்லை. அசா1 காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி காவல் துறை அதிகாரியோ, கிராம நிர்வாக அதிகாரியோ , மற்றும் பொதுமக்கள் தனிப்பட்ட நபரையோ குறிப்பிட்டு அசிங்கமாக வார்ததையால் பேசவில்லை என்றால சரிதான். நான் சொல்வது போல எதிரி அசிங்கமாக பேசவில்லை மிரட்டவில்ல எதிரி மீது வேண்டும் என்றே காவல்துறையினர் வழக்கு பதிவு செய்துள்ளனர் என்றால் சரியல்ல. சமபவ சமயத்தில நான் பாதுகாப்பு பணியில் இருந்ததாகவம் சமப்வத்தை நேரில் பார்த்தாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால சரியல்ல. நான் சம்பவ சமயத்தில் சம்பவயிட்தில் இல்லாத காரணத்தினால் தான் போலிஸ வாக்குமூலத்தில் ஒரு மாதிரியாகவும் தற்போது நீதிமன்றத்தில் வேறு ஒரு மாதிரியாகவும்

முரண்பட்டு சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேல் அதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை. நேரம். 12.45